★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 14உ புதன் (29—8—56) ★ ★ வெளியூர்: ஆவணி 15உ வியாழன் (30—8—56) [இதழ் 68

நிலக்கரி சுத்திகரிப்புத் தொழிற்சாலை

பீகாரில் நிறுவப்படுகிறது

கீழ்த்திசையிலேயே மிகப் பெரியது என்று கருதப்படும் நிலக்கரி சுத்தம் செய்யும் தொழிற்சாலை ஒன்றினை பீகார் மாநிலத்தில், ஹாசாரிபாக் மாவட்டத்தைச் சேர்ந்த கார்கலி என்ற இடத்தில் நிறுவுவதென டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

ஒரு மணிக்கு சுமார் 500 டன் நிலக்கரியை சுத்தம் செய்யக் கூடிய ஆற்றலுள்ளதாம் இத்தொழிற்சாலை!

ரூ. 1 56 கோடி செலவில் அமையும் இத்தொழிற்சாலை,

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரஸ் மேயருக்குக் காங்கிரஸ் உறுப்பினர்கள் அலட்சியம்

கூட்டத்தை ஒத்திவைத்த பிறகும் கூட்டம் நடத்த முயலும் காங்கிரஸ் முறைகேடு

ரிப்பன் மண்டபத்தில் கொந்தளிப்பும் குழப்பமும்!

சென்னை, ஆக. 29—

"நகராட்சி மன்றத்தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்து விட்ட பிறகு, துணைத் தலைவர் கூட்டத்தை நடத்த முயற்சிப்பது சட்ட விரோதமாகும். வெறும் பெரும்பான்மையைக் கணக்கிட முடியாது; கருதத்தக்கது சட்டமேயாகும்.

"தலைவரின் 'ஆட்சிக்கோல்' இங்கு காணப்படவில்லை; அப்படி இருக்கும்பொழுது தலைவர் எங்கே இருப்பார்?"

இவ்வாறு, எதிர்க் கட்சித் தலைவர் இராசமன்னார் அவர்கள் கூற, சென்னை நகராட்சி மன்றத்தின் கூட்டத்தில் கொந்தளிப்பும் குழப்பமும் தாண்டவமாடியது.

தலைவரின் மேசைக்கு முன்புறமிருந்த செயலாளர் மேசையை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சிலர் சாய்க்க, அங்கிருந்த விவகார ஏடுகளும் நூல்களும் தரையில் சிதறின.

'இறங்கிப் போ! இறங்கிப் போ!' என்ற முழக்கம் மன்றத்தின் அறையில் எதிரொலித்தது.

துணைத் தலைவரின் பேச்சைக் கேட்க முடியாத அளவு கூச்சல் இருந்ததின் காரணமாகக் கூட்டத்தைவிட்டு துணைத் தலைவர் வெளியேறிவிட்டார்.

சென்னை நகராட்சி மன்ற உறுப்பினர்களின் சாதாரண கூட்டம் ரிப்பன் மாளிகையில் இன்று மாலை கூடியது. கூட்டத்தில் முடிவு கட்ட இருந்த விஷயங்களில் முக்கியமானது சுகாதார அதிகாரி நியமனமாகும்.

நகரசபையில் இப்பொழுது பணிபுரிந்துவரும் இரண்டு துணை சுகாதார அதிகாரிகளும் அப்பதவிக்கு முயற்சித்து வருகின்றனர்.

இவ்விருவரில் யாரை நியமிப்பது என்பதைக் குறித்து, நகரசபையில் பெரும்பான்மையினரான காங்கிரஸ் கட்சியினர் தனித்து ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

கூட்டம் நடத்தக் குறிப்பிட்டிருந்த 5-15 மணியளவில், கூட்ட மண்டபத்தில், எதிர்க் கட்சி உறுப்பினர்களான 18 உறுப்பினர்களே இருந்தனர். கூட்டத் தலைவர், கூட்டம் நடத்துவதற்கு வேண்டிய எண்ணிக்கைக்காக தொடர்ந்து மணி அடித்தார்; இருந்தும், காங்கிரஸ் உறுப்பினர்கள் மண்டபத்திற்குள் குறித்த காலத்தில் வரவில்லை.

மணி 5-30 ஆகியும் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்திற்கு வரவில்லை. அதன் பிறகு சிலர்—ஒரு காங்கிரஸ் உறுப்பினர் உள்பட மண்டபத்திற்குள் நுழைந்தனர். வந்த காங்கிரஸ் உறுப்பினர் எண்ணிக்கை கூட்டம் துவங்கும் வகையில் இல்லை எனச் சுட்டிக் காட்டினார். இந்நிலையில், 5-35-மணிக்குக் காங்கிரஸ் உறுப்பினர்கள் மண்டபத்திற்குள் நுழைந்தனர். உள்ளே இருந்த எதிர்க் கட்சியினர் வெளியே சென்று, பின்னர் திரும்பி வந்து, 'கூட்டம் நடத்துவதற்குத் தேவைப்படும் எண்ணிக்கை இல்லாததால், கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தாது ஒத்திவைக்க வேண்டும்' எனக் கோரினர்.

எதிர்க் கட்சித் தலைவரான இராசமன்னார் அவர்கள், கூட்டம் கூடுவதற்குக் குறிப்பிட்டிருந்த 5-15-லிருந்து 15 நிமிடம்வரையில் கூட்டத்திற்கான எண்ணிக்கை உருவாகாது இருந்தால், கூட்டத்தை நடத்தாமல் ஒத்திவைக்க வேண்டும் எனக் குறிப்பிடும் முனிசிபல் சட்டத்தைக் காட்டினார். 5-30 மணிக்குப் பிறகு தேவைப்படும் எண்ணிக்கை இருந்து கூட்டம் நடத்தப்படுமானால் அது சட்ட விரோதமான கூட்டமாகக் கொள்ளப்படும் என்ற சட்ட விதியையும் சுட்டிக்காட்டி, கூட்டத்தை ஒத்திவைக்கும்படி மேற்படி உறுப்பினர் வலியுறுத்தினார்.

"உறுப்பினர்களின் கருத்தை ஈர்க்க இரண்டாம் முறையாக அடிக்கப்படவேண்டிய மணி ஒரு நிமிடத்திற்கு மேல் அடிக்கக் கூடாது என விதி இருந்தும், இன்று 5 நிமிடங்கள் வரை மணி தொடர்ந்து அடிக்கப்பட்டு இருக்கிறது.

"தலைவர் உள்நுழைந்ததும், கூட்டத்தை ஒழுங்காக இருக்கச் சொல்லி இருக்கவேண்டும்; அது ஒன்றுதான் கூட்டத்தைத் துவக்குவதற்கான அறிகுறியாகக் கொள்ளப்படும். அவ்வாறு தலைவர் அறிவிக்கத் தவறிவிட்டார். இப்பிரச்சினையும் வழக்கு மன்றம் ஏறக்கூடும்—கூட்டம் தொடர்ந்து நடத்தப்படுமானால்" என்று எதிர்க்கட்சி உறுப்பினரான அந்தோனியார் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

மேலும் பலர் பலவித விளக்கங்களைக் கூறிக்கொண்டிருப்பதைக் கண்ட தலைவர், கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு வெளியேறிவிட்டார்.

இந்நிலையில், துணைத் தலைவரின் பெயரை நகரசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவரான இராதாகிருஷ்ணனார் அவர்கள் முன்மொழிந்தார்; மற்றொரு உறுப்பினர் வழிமொழிய, தலைவர் இடத்தில் அமர்ந்து துணைத் தலைவரான டாக்டர் கே. வி. சாமி, கூட்டத்தைத் தொடர்ந்து நடத்த முயற்சித்தார்.

இதை சட்ட விரோதமெனக் கூறி, தலைப்பில் கூறப்பட்டுள்ளபடி 'இறங்கு' என முழங்கினர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்.

காங்கிரஸ் கட்சியினரின் கடமை உணர்ச்சிக்கும் நிர்வாகத்திறமைக்கும் மேற்படி சம்பவம் ஒரு சிறந்த சான்றாகும்!

ஐ. ஏ. எஸ். பரீட்சைக்கு 22,896 பேர் மனுச் செய்துள்ளனராம்

புதுடில்லி, ஆக. 28—

அவசர வேலைகளுக்காகத் தேர்ந்தெடுப்பதற்கென நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்திய நிர்வாக சர்வீஸ் பரீட்சைக்கு ஜூலை 31-ந் தேதி முடிய 22,896 மனுக்கள் வந்திருப்பதாக, மக்கள் சபையில் உதவி மந்திரி பி. என். தத்தார் தெரிவித்திருக்கிறார்.

பரீட்சைக்கு இன்னும் தேதி குறிக்கப்படவில்லை என்றும், ஆனால், டிசம்பரில் பரீட்சை நடைபெறும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தேயிலை தோட்ட நிர்வாகி கொலை

ஆத்திரங் கொண்ட தொழிலாளியின் செய்கை

கௌஹாத்தி, ஆக. 28—

கூலியா எனும் தேயிலைத் தோட்ட நிர்வாகியான ஏ. பி வாக்கர் என்பாரை, தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவர் ஆத்திரங் கொண்ட நிலையில் கத்தியால் குத்திக் கொன்று விட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

புலன் விசாரணைக்காகப் போலீசார் விரைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

பொருள் எடுத்து வருவதில் சிங்கைப் பிரயாணிகள் அல்லல்

பரிகாரம் கோரி முதல் மந்திரியிடம் முறையீடு

சிங்கப்பூர் தமிழ்ப் பிரதிநிதித்துவக் கழகச் சார்பில், அதன் துணைத் தலைவர் எஸ். சையது அகமதும், செயலாளர் எம். எம். மீலேயும், நேற்று சென்னை சர்க்கார் காரியாலயத்தில் முதலமைச்சர் காமராசரைப் பேட்டி கண்டு, சிங்கப்பூரிலிருந்து சாமான்கள் கொண்டு வருவதற்கான கட்டண வரம்பு பற்றி முறையிட்டுக் கொண்டனர்.

ரூ. 2,000 மதிப்பு வரையில் கட்டணமின்றி சரக்குகளைக் கொண்டு வருவதற்கு இதுவரையிலும் அனுமதியிருந்தது; இதை ரூ 500-க்குக் குறைத்துவிட மத்திய அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது; இதனால் மிகக் கஷ்டமேற்படுவதாகவும், முன்போலவே ரூ. 2,000 வரை கட்டணமின்றி சாமான்கள் கொண்டுவர அனுமதிக்க வேண்டுமென்றும், இதற்காகச் சென்னை முதலமைச்சர் மத்திய சர்க்காரை அணுகி வற்புறுத்த வேண்டுமென்றும் முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டனர்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

காரைக் கலந்தாலோசிப்பார்கள் என்றும், எனவே இது குறித்து எந்தவிதமான ஆர்ப்பாட்டங்களோ வேலை நிறுத்தங்களோ தேவையில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒவ்வொரு மாகாணத்திலும் இந்தி மொழி அதிகாரியை நியமிக்க வேண்டுமாம்

மாகாண ஆட்சிகளின் கருத்து அறியப்படுகிறதாம்

புதுடில்லி, ஆக. 29—

"இந்தி மொழி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் தனித்தனியாக இந்தி மொழி கல்வி அதிகாரிகளை நியமிக்க வேண்டும்,"

என்று, இந்தி சிட்சா சமிதி இந்தியப் பேரரசை வற்புறுத்தி இருக்கிறது.

இக்கருத்தை ஏற்றுக்கொள்ளும்படி மாகாண ஆட்சிகளை இந்திய அரசாங்கம் கேட்டிருக்கிறது.

இப்பிரச்சினை அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்துவருவதாக இராஜ்ய சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு கல்வி அமைச்சர் சார்பில் அமைச்சராக இருந்துவரும் சிமாலி அறிவித்திருக்கிறார்.

'எண்ணெய்த் தொழிற்சாலையை அசாமிலேயே நிறுவ வேண்டும்'

பூரண கடையடைப்பு மூலம் மக்கள் வற்புறுத்துகின்றனர்

ஏராளமானோர் கைது செய்யப்படுகின்றனராம்

கௌஹாத்தி, ஆக. 28—

நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிற எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலையை அசாம் மாநிலத்திலேயே நிர்மாணிக்க வேண்டும் என்ற அவசியத்தைச் சர்க்காருக்குத் தெரிவிக்கும் நோக்கத்துடன் கௌஹாத்தியிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பூரண கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அநேகமாக எல்லா கடைகளும், சந்தைகளும்கூட மூடப்பட்டனவாம். மேலும் இரயில் வண்டிகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மறியல் செய்திருக்கின்றனர். நகரில் பஸ் வண்டிகள், சைக்கிள் ரிக்ஷாக்கள் போன்றவைகூட ஓடவில்லையாம்.

இரயில்கள் முன் மறியல் செய்தவர்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டு, போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

சர்க்கார் பஸ் போக்குவரத்திற்கு இடையூறு உண்டுபண்ணியதற்காக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

தற்போது ஆயுதந் தாங்கிய போலீசார் ரோந்து சுற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவாக இன்று முழுமையிலும் மொத்தம் 157 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம். ஒருவர் காயமடைந்திருப்பதாகவும் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

அசாமிலேயே நிறுவப்படுமாம்

இந்த எண்ணெய் சுத்தம் செய்யும் ஆலையை நிறுவும் விஷயத்தில், இந்திய சர்க்கார், அசாம் மாநிலத்திற்கு வெளியே நிறுவுவதற்கான தவிர்க்கமுடியாத காரணங்கள் ஏற்பட்டாலொழிய அசாமிலேயே ஏற்படுத்துவார்களென்று, மத்திய இயற்கை வள அமைச்சர் மாளவியா கூட்டமொன்றில் பேசுகையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். எனினும், அந்த ஆலையை எந்த இடத்தில் நிறுவுவது என்பது குறித்து இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த ஆலையை நிர்மாணிப்பதற்கான இடம் குறித்து முடிவு [illegible] மத்திய சர்க்காருக்கு, [illegible] கூறவும் உதவி செய்யவும் ஒரு நிபுணர் குழு நியமிக்கப்படும் என்றும், எந்த ஒரு முடிவும் மேற்கொள்ளப்படு முன்னர், இந்திய சர்க்கார், அசாம் மாநில [illegible]

(8-ம் கலம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ்
சென்னை 29-8-'56 புதன்

எவ்வளவு நம்பிக்கை?

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து இலங்கைத் தீவிற்குச் சென்றிருந்த இலட்சக் கணக்கான திராவிடப் பெருங்குடி மக்களில் பிற்காலத்தில் சென்றிருந்த மக்களில் பெரும்பகுதியினர் தமிழ் மக்களேயாவர். அவர்களுக்கு அடுத்த நிலையில் சென்றிருந்தவர்கள் மலையாளிகள் ஆவர்.

அத்தீவிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றி வருவதைப் போன்றே மலையாள மொழியினரையும் அத்தீவின் சிங்களத் துரைத்தனம் வெளியேற்றி வருகிறது. அத்தீவில் இருந்துவந்த மொத்தம் 45,000 மலையாளிகளில் ஏறத்தாழ 75 சதவிகிதத்தினர் திரு-கொச்சிக்குத் திரும்பி வந்து விட்டனர். மற்றவர்களும் கூடிய விரைவில் தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்பப் பட்டு விடுவர்.

ஆயிரக்கணக்கில் திரும்பியுள்ள மலையாளிகளை மீண்டும் மலையாளத்தில் இடமளித்து வாழ்வளிக்க வேண்டியது அப்பகுதி அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும். அதைப் போன்றே அவர்களுக்கு மறுவாழ்வு அமைத்துத் தருவதில் இந்தியப் பேரரசிற்கும் பெரும் பொறுப்பு இருந்து வருகிறது.

ஆனால் இந்தியப் பேரரசோ, இத்துறையில் தனக்குள்ள பெரும் பொறுப்பை உடனடியாகச் செயலாற்ற முன்வரக் காணோம். கொள் என்றால் வாயை அகலத் திறப்பதும் கடிவாளம் என்றால் வாயை இறுக மூடிக்கொள்வதும் என்ற நிலையில் இந்தியப் பேரரசு இருந்துவருகிறது.

இவ்வாறு ஒரு பிரச்சினை இருப்பது தனக்குத் தெரியாத காரணத்தால்தான், இது பற்றி கருத்துச் செலுத்தாது இந்தியப் பேரரசு இருந்துவருகிறதோ எனக் கொள்வதற்குமில்லை. இந்தச் சிக்கலைத் தீர்க்கக் கடந்த ஏழெட்டு ஆண்டுக் காலமாக இலங்கை ஆட்சியாளர்களுடன் நேரடியாகப் பேசி வரும் அரசாங்கம் இந்தியப் பேரரசேயாகும். எனவே, இப்பிரச்சினையை அது அறியாமலிருக்கிறது எனக் கருதிக் கொள்வதும் பொருந்தாது.

இத்தகு அகதிகளுக்குப் புது வாழ்வு அளிப்பதில் அனுபவமும், அதற்குத் தேவைப்படும் பண வசதியும் தனக்கு இல்லாத காரணத்தால்தான் இந்தியப் பேரரசு, இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதில் அக்கறை காட்டாமல் இருந்து வருகிறதோ என எண்ணுவதற்கும் அப்பேரரசின் நடைமுறை இடந்தருவதாக இல்லை. பல இலட்சக் கணக்கான பாகிஸ்தான் அகதிகளை ஏற்றும், குடிவாழ இடமும் பயிர் செய்ய நிலமும், தொழில் செய்ய முதலும் கல்விபெற சிறந்த வசதியும், மருத்துவ உதவியும் தொழில் கிடைக்கும் வரை உதவத் தொகையும் தண்டச்சோறும் போட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு தேடித்தருவதில் இந்தியப் பேரரசு, அவனியில் வேறு எந்த ஒரு அரசும் பெற்றில்லாத அளவில் மிகச் சிறந்த அனுபவத்தைப் பெற்று இருக்கிறது. இன்னும், பாகிஸ்தான் அகதிகளை வரவேற்று வாழ்வளிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறது இந்தியப் பேரரசு.

இதுவரையில் பல கோடி ரூபாய்களை பாகிஸ்தான் அகதிகளின் மறுவாழ்விற்காக இந்தியப் பேரரசு செலவழித்து இருக்கிறது. மேலும் மேலும் செலவிட, இவ்வரசு பெரும் பெரும் தொகைகளுக்குத் திட்டங்களை வைத்துக் கொண்டும் இருக்கிறது.

பாகிஸ்தான் அகதிகளுக்கு உயர் வாழ்வு தர அருமையான திட்டங்கள், அத்திட்டங்களை நிறைவேற்றத் தேவைப்படும் பெருந்தொகை, அதை ஒழுங்குபடக் கண்காணித்து வெற்றி பெறச் செய்ய ஒரு தனி அமைச்சு என்ற முறையில், பாகிஸ்தான் அகதிகளுக்கு நல்வாழ்வு தருவதில் இந்தியப் பேரரசு ஏற்பாடு செய்துவைத்திருக்கிறது. அப்பெரும் ஏற்பாட்டில் ஒரு சிறு பகுதியை, ஆயிரத்தில் - இல்லை - பத்தாயிரத்தில் ஒரு பங்கைச் செலவிட இந்தியப் பேரரசு முன்வந்தாலும் போதும்—பொதுவாக இலங்கைத் தீவிலிருந்துத் தாய்நாடு திரும்பிவரும் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு வாழ்வு தேடித் தருவது முழு வெற்றி பெற்றுவிடும். ஆனால், இந்திய அரசாங்கமோ, இப்படி ஒரு பிரச்சினை இருந்து வருகிறது என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள விருப்பமில்லாத நிலையிலேயே பிடிவாதமாக நடந்துகொண்டு வருகிறது. ஏன் இந்தப் பிடிவாதம், ஏன் இந்த அலட்சியம் என இந்தியப் பேரரசைத் தட்டிக் கேட்கும்நெஞ்சுரம் இங்குள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு அறவே இல்லாமல் இருக்கிறது. இனப்பற்று, மனிதாபிமானம் ஆக இரண்டும் இல்லாத மாமிசப் பிண்டங்களாக இங்குள்ள காங்கிரஸ் மண்டலாதிபதிகள் காட்சியளித்து வருகின்றனர்.

இலங்கைத் தீவிலிருந்து வெளியேறிவந்துள்ள மலையாளிகளைக் குறித்தும், அவர்களுக்கு வாழ்வு தேடித் தருவது பற்றியும், அவர்கள் வந்துள்ளதால் ஏற்பட்டுள்ள புதிய நெருக்கடியை விளக்கியும், தி. கொ. முன்னாள் முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஏற்கனவே வேலையின்மைக்குப் பலியாகிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் மலையாளத்தில், இலங்கைத் தீவிலிருந்த மலையாளிகள் வரவால், நிலைமை பயங்கர உருவெடுத்துவிட்டது என, அவர் நிலைமையை வரையறுத்துக் காட்டியுள்ளார்.

சிலோன் மலையாள அகதிகள் சங்கத் தலைவராக இருந்து வருகிற சுகுமாரன் போட்டகாட் என்பவர்,

"இலட்சக்கணக்கான பாகிஸ்தான் அகதிகளின் பிரச்சினையை இந்தியப் பேரரசு தீர்த்துவிட்டது; இப்பொழுது சிலோன் அகதிகளுக்கு நல்வாழ்வு தேடித்தரும் பிரச்சினையை இந்தியப் பேரரசு மேற்கொள்ளவேண்டும்," எனக் கோரியுள்ளார்.

"இந்தியப் பேரரசும், மாகாண ஆட்சியும் சிலோனிலிருந்து வலுவில் வெளியேற்றப்படும் மக்களை அகதிகளாகக் கருத வேண்டும்."

இப்படி ஒரு தீர்மானத்தையும், அக்கூட்டம் நிறைவேற்றி இருக்கிறது.

சிலோனிலிருந்து வெளியேற்றப்பட்டு மலையாள நாட்டிற்குள் மீண்டும் நுழையும் மலையாளிகளின் நலன்களை கவனித்துக் கொள்ள, அவர்கள் பெயரால் ஒரு சங்கமும் நடைபெறுகிறது; பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்கு ஒரு முன்னாள் அமைச்சரும் முன் வருகிறார். பல மலையாளிகளும் ஆதரவு காட்டிப் பேசுகிறார்கள்.

ஆனால் தமிழ் நாட்டிலோ? இங்குள்ள பச்சைத் தமிழர் காமராசரோ,

'சிலோனிலிருந்து தமிழ் நாட்டிற்கு ஓடிவரும் தமிழர்கள், தங்களுடைய எதிர்கால வாழ்வைத் தாங்களே தேடிக் கொள்ளுவார்கள். அவர்களுக்கு எவர் துணையும் தேவை இல்லை," எனக் கூறுவதின் மூலம், தாம் அக்கறை காட்டப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்தினதுடன், மற்றவர்களும் அவர்களுக்கு உதவக்கூடாது எனக் கட்டளையிடும் வகையில் நடந்து கொண்டு இருக்கிறார்.

இவர்தான் 'பச்சைத் தமிழராம்!' இவரே எதிர்காலத்திற்கும் முதலமைச்சர் ஆக வேண்டுமாம்!

சிலோனில் இருந்து தாய்நாடு திரும்பும் தமிழ் மக்களை, மலையாள மொழியினரை வாழ்விக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியப்பேரரசிற்கும் உண்டு. இருந்தும், பாகிஸ்தான் அகதிகளுக்கு வாழ்வளிப்பதில் அதற்கு ஆர்வமும அக்கறையும் இருக்கிறதே அல்லாது, தென்னாட்டினர் அவதி குறித்து அதற்குத் துளியும் அக்கரையே இருக்கவில்லை. இந்தியாவில் தானாகக் கனியாத பழத்தைத் தடிகொண்டுத் தாக்கிக் கனிய வைக்கப் பார்க்கின்றனர் மலையாள மக்கள்—அவர்கள் தலைவர்கள்! அந்த முயற்சியைக் கண்ட எவரும் அவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை எனக்கூறி ஆச்சரியப்படத்தான் செய்வர்.

8 மாதங்களாகச் சம்பளம் கிடைக்கப்பெறாத ஆசிரியர்கள்

அக்டோபர் முதல் வேலைநிறுத்தம் செய்ய முடிவு

கடந்த 8 மாதங்களாகத் தங்களுக்குச் சம்பளம் தரப்படவில்லை என்ற காரணத்திற்காக, ஆஜ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த சர்க்கார் பள்ளிகள், சர்க்கார் உதவிபெறும் பள்ளிகளிலுள்ள சுமார் 900 ஆசிரியர்கள், வருகிற அக்டோபர் முதல் தேதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்துள்ளனராம்.

மேலும் பள்ளி நிர்வாகத்திலிருக்கும் மாநிலக் கல்வி இலாகா அதிகாரிக்கும் இது குறித்து முன்னறிவிப்பு தருவதென்றும் அந்த ஆசிரியர்கள் சங்கம் முடிவு செய்திருக்கிறதாம்.

'குடியரசு முறையில் ஏற்படும் நோய்களுக்கு கிளர்ச்சிகளே நல்ல மருந்துகள்'

'அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருக்க முடியாது'

'மக்களின் அறிவு முதிர்ச்சிக்கு ஒப்பவே குடியரசு முறை பரிபக்குவமடையும்'

தோழர் ஈ. வெ. கி. சம்பத் தெளிவுரை

"ஆளுபவர் இழைக்கிற அநீதிகளை — குறைகளைக் களைந்து கொள்ள மறு அமைப்பு ஒன்றை மக்கள் நிறுவிக்கொள்ளும் வாய்ப்பு குடியரசு முறையில் உண்டு"

என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், 'குடியரசு' என்ற தலைப்பில் சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசியபோது குறிப்பிட்டார்.

அவரது சொற்பொழிவின் இரு பகுதிகள் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன. தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது :—

'ஜெர்மனியில் இட்லரும், இத்தாலியில் முசோலினியும் இழைத்த பெரும் தவறுகளையும் கொடுமைகளையும் அந்த நாட்டு மக்கள் திருத்தமுடியாமல் தவித்தார்கள். ஏனெனில், அந்தச் சர்வாதிகார அரசு முறைப்படி, தனி மனிதன் ஒருவனது திறமையை நம்பி அமைக்கப்படுகிற ஆட்சி என்பதால், அந்த மனிதன் தவறே இழைக்கமாட்டான் என்றும் மக்கள் நம்பச் செய்யப்பட்டதுதான்; மேலும் சர்வாதிகாரிகள் இழைக்கிற தவறுகளைக் கண்டிக்கிற உரிமையையும் மக்கள் இழந்துவிடுகிறார்கள்.

"ஸ்டாலின் மிகப் பெரிய சர்வாதிகாரியாக விளங்கினார் என்று இன்று எடுத்துரைக்கிறார்கள்; அவர் எத்தனையோ மகத்தான தவறுகளை இழைத்தார் என்று அடுக்கிக்காட்டுகிறார்கள்.

"இந்தத் தவறுகளை, ஏன் முன்பே குருஷ்சேவ் போன்றோர் ஸ்டாலின் உயிரோடிருந்த நாட்களிலேயே எடுத்துரைத்துக் கண்டிக்கவில்லை என்று கேள்வியும் எழுப்பப்படுகிறது

"ஸ்டாலின் ஒரு சர்வாதிகாரி என்ற முறையில்—சமீபகாலத்தில் வாழ்ந்த மிகப் பெரிய சர்வாதிகாரி என்ற நிலையில் தனக்குத் தோன்றியபடி எல்லாம் சென்றார்; தவறுகள் இழைத்தார். ஆனால் அதை குருஷ்சேவ் போன்றோர் அப்போதே கண்டிக்க முடியாது போய்விட்டது, அந்த அரசுமுறையின் கோளாறினால்தான்!

"'ஏன் கண்டிக்கவில்லை?' என்று குருஷ்சேவையோ, 'ஏன் தவறு இழைத்தார்?' என்று ஸ்டாலினையோ கேட்பதற்கில்லை. ஏனெனில், 'சர்வாதிகார அரசுமுறையில் அதுதான் நிகழும்,' என்றுதான் அறிஞர் உலகம் கூறுகிறது; அதனால்தான் அறிஞர் உலகம், குடியரசு முறையே புனிதமான முறை, என்று தழுவிக்கொண்டிருக்கிறது.

"மற்றும், குடியரசு முறையில் அதிகாரம் அத்தனையும் ஓரிடத்தில் குவிந்துகிடக்கக்கூடாது—குவிந்து கிடக்க முடியாது. ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத பல இடங்களுக்கு அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கும்; அப்படியிருந்தால்தான், குடியரசு முறை உயிரோடு இருக்கிறது என்று மட்டுமல்ல—ஆரோக்கியமாகவும் இருக்கிறது என்று பொருள்படும்.

"குடியரசுத் தலைவர் ஒருவரை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர்; அவரைக் கட்டுப்படுத்த 'செனட் சபை' ஒன்று இருக்கிறது; கீழ் சபை ஒன்று உள்ளது; இந்த சபைகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளை அரசியல் சட்டம் வகுத்துக்கூறுகிறது. இந்த அரசியல் சட்டத்திற்கு முரணான வகையில் ஆட்சியாளர் நடந்துகொள்ளாமல் பார்த்துக்கொள்ள முழு சுதந்திரம் படைத்த உயர் நீதிமன்றம் இருக்கிறது இப்படி அதிகாரங்களை வைத்திருப்போர் ஒருவருக்கொருவர் கட்டுப்படுத்திக்கொண்டு—மட்டுப்படுத்திக்கொண்டு, அமெரிக்கக் குடியரசுமுறை நடைபெற்றுவருகிறது.

"இன்று உலகத்திற்கு வந்துள்ள பேராபத்து என்னவென்றால், எதை வேண்டுமானாலும், தங்களிஷ்டப்படி 'குடியரசு' என்று பிரகடனப்படுத்திச் சொல்கிறார்களே, அதுதான்!

'உண்மையாகவே, மக்களைக் காப்பாற்றக்கூடிய அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும், குடியரசு முறை!

"மற்றும் சிலர் குடியரசு முறையின் பெயரால் ஆட்சிக்கு வந்தவர்கள்—மக்கள் ஐந்தாண்டுக்கு ஒரு முறை வரும் தேர்தலில் வாக்களித்து தங்களை ஆளச் சொல்லி விட்டார்கள் என்பதால், அடுத்த ஐந்தாண்டுகள் வரை நாட்டில் அமைதி நிலவவேண்டும்-சுடுகாட்டு அமைதி வேண்டும் என்று கூறுவதையும் காண்கிறோம்.

"குடியரசு முறை நோயற்று வாழ்வதற்கு இந்தக் கூற்று சரியானதாக இருக்க முடியாது.

"'நாட்டில் ஆட்சியாளர்கள் செய்யக்கூடிய தவறுகளை—அல்லது மக்கள் விரும்பாத காரியங்களை, மக்கள் சிறு சிறு கிளர்ச்சிகள் மூலம் திருத்த வேண்டும்; அதுதான், குடியரசு முறைக்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்கும் மருந்து' என்று கூறுகிறான் ஜெபர்சன்.

"குடியரசு முறை, அந்தந்த நாட்டு மக்களின் அறிவு முதிர்ச்சிக்குத் தக்கவாறு பரிபக்குவமடையும்.

"குடியரசு முறை என்ற இயந்திரத்தில் விழக்கூடிய சிறு தூசிகளைக் காரணமாகக் காட்டி, இயந்திரத்தையே எள்ளி நகையாடக் கூடாது; ஆனால், குடியரசு முறையில் உள்ள சிற்சில பலவீனங்களைக்காட்டி சிலர் குடியரசு முறையையே எள்ளிநகையாடுகிறார்கள்.

"சட்டசபையில் தூங்குகிறார்கள் சிலர்; 'இப்படித் தூங்கலாமா?' என்று வேறொரு உறுப்பினர் கேள்வி எழுப்புகிறார்; 'இதுதான் குடியரசா?' என்று கேட்கின்றனர் சிலர்.

"சட்டசபையில் போய் தூங்குகிற பொறுப்பற்றவர்களை சட்டசபைக்கு அனுப்பாமலிருக்கவும், பொறுப்புள்ளவர்களை அனுப்பவுமான முயற்சியில் ஈடுபட வேண்டுமே தவிர, சட்டசபை என்ற அமைப்பே கூடாது' என்று கூறுவது நியாயமாகாது.

"வேறு சிலர் 'குடியரசு முறையினால் மக்களுக்கு நன்மைகிடைக்கத் தாமதமாகிறது; தன்மை, நன்மை என்ற நிலைமாறி நாள் பட்டுக் கிடைக்கிறது; சர்வாதிகார முறையில் சர்வாதிகாரி, மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று நினைத்தால், நினைத்தமாத்திரத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

கரக்பூர் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம்

தேசீய முக்கியத்துவம் வாய்ந்ததாம்

அமெரிக்காவில் உள்ளதைப்போன்ற சிறப்புடையதாம்

புதுடில்லி, ஆக. 26—

கரக்பூர் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தைத் தேசிய முக்கியத்துவமுள்ள நிலையம் என அறிவிக்கும் மசோதாவை, இந்தியக் கல்வித்துறை துணை அமைச்சர் மனமோகனதாஸ், மக்கள் சபையில் பிரரேபித்துள்ளார்.

'அமெரிக்காவிலுள்ள பெரிய தொழில் நுட்பக கல்லூரியான மாசசூசெட் கல்லூரியைப் போன்றது, கரக்பூர் கல்லூரி' என அவர் கூறினர்.

'இங்கு பயிற்சி அளிப்பதுடன் ஆராய்ச்சி வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன; இந்த நிலையத்திற்கு தேசீய மதிப்பு கொடுக்கப்படுவது அவசியம்; அத்துடன், பட்டங்களைத் தரும் அதிகாரம் இந்த நிலையத்திற்கு அளிக்கப்பட வேண்டும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை உறுப்பினர் ஒருவர், 'தென்னாட்டில் ஒரு பெரிய தொழில் நுட்ப நிலையம் அமைக்க வேண்டும்' என்று வற்புறுத்தினர்.

பதிலளிக்கையில் அமைச்சர் சொன்னர் :—

"தொழில் நுட்பக் கல்வி வசதி இல்லாத மாகாணங்களுக்கு 30 சதவிகித இடங்கள் கரக்பூர் தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன; நடத்துவதற்கு ஆட்களும், இதர வசதிகளும்கிடைக்காத காரணத்தாலேயே புதிய நிலயங்கள் அமைப்பது தாமதப்படுகிறது; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முற்பாதிக்காலத்தில் மேற்குப் பகுதியில் உயர்தரத் தொழில் நுட்பப் பயிற்சி நிலயத்தை அமைப்பதென்றும், இரண்டாவது பாதிக்காலத்தில் தென் பகுதியிலும்—வட பகுதியிலும் உயர்தரத் தொழில் நுட்பப் பயிற்சி நிலயங்களை அமைப்பதென்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது."

தொழில் நுட்பப் பயிற்சி பெறும்

இந்திய மாணவருக்கு!

புதுடில்லி, ஆக. 27—

தொழில் நுட்பப் பயிற்சிபெறுவதற்காக ஜெர்மனிக்குச் செல்லும் இந்திய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்க மேற்கு ஜெர்மன் சர்க்கார் ஒப்புதலளித்திருக்கின்றனராம்.

எப்படிப்பட்ட மாணவர்களை அங்கு அனுப்புவது என்பது குறித்து இந்திய சர்க்காருடன் விவாதிக்க, அடுத்த மாதம் ஜெர்மனியிலிருந்து சில அதிகாரிகள் இந்தியாவிற்கு வருவார்களென்று மக்கள் சபையில் பிரதமர் நேரு அவர்கள் அறிவித்திருக்கிறார்.

மொத்தம் 100 மாணவர்களுக்கு மேற்கு ஜெர்மனியில் உபகாரச் சம்பளம் தரப்படும் என்றும், இந்த மாணவர்களின் போக்கு-வரத்துச் செலவு, பள்ளிக்கூடச் சம்பளம் முதலியனவற்றையெல்லாம் கூட ஜெர்மன் சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்றும், இது மட்டுமல்லாமல், அங்குள்ள மாகாண சர்க்கார்கள் சுமார் 500—600 மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கச் சம்மதம் தந்திருப்பதாகவும், இன்னும் சில வகைகளில் உபகாரச் சம்பளம் கிடைக்கும் என்றும் கூறப்பட்டது.

உடற் பயிற்சிக்காக

தேசீயக் கல்லூரியாம்

ரூ. 70 இலட்சம் செலவில் கட்ட ஏற்பாடு

கோவை, ஆக. 27—

உடற் பயிற்சிக் கல்விக்காக ரூ. 70 இலட்சம் செலவில் தேசியக் கல்லூரி ஒன்றை நிறுவ மத்திய சர்க்கார் ஆலோசித்து வருவதாக மத்திய கல்வி இலாகா துணை ஆலோசகர், இங்கு நடைபெற்ற தென் பிராந்திய கல்வி மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மலேயாவில் நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

★

மலேயாவிற்கு வருகை தந்த நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களை சிங்கப்பூர் பயில்பார் விமான நிலையத்தில் ஏராளமான தோழர்கள் கூடி நிற்க, சிங்கப்பூர் தி. மு. கழகச் செயலாளர் சிங்காரவேலு மாலையணிவித்து வரவேற்கிறார்.

★

தேர்தல் நிதி

தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் உதவி

27—8—56 மாலை சென்னை தேனும்பேட்டையில் நடைபெற்ற தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்கவிழாவின்போது அண்ணா அவர்களிடம் மேற்படி கழகச் சார்பில் தேர்தல் நிதிக்காக ரூபாய் 50. கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

வள்ளுவர் நாள் கொண்டாடுவதற்கு விடுமுறை கிடையாதாம்

கருடோற்சவத்திற்கு விடுமுறை வேண்டுமாம்

சென்னை, ஆக. 27—

சென்னை நகரில் உள்ள பார்த்தசாரதி சாமி கோயிலில் நடைபெறும் கருடோற்சவம், மயிலை அறுபத்துமூவர் உற்சவம் ஆகியவற்றுக்குச் சர்க்கார் விடுமுறை அளிக்கவேண்டுமென்று மேல்சபையில் சில உறுப்பினர்கள் கேட்டபோது, அமைச்சர் பக்தவத்சலம், கருடோற்சவம் காலையிலும், அறுபத்துமூவர் உற்சவம் மாலையிலும் நடைபெறுவதால் அதையொட்டி விடுமுறை அவசியமில்லை என்று சர்க்கார் கருதுவதாகக் கூறியிருக்கிறார்.

'வள்ளுவர் தினமென்று ஒரு நாளைக் குறிப்பிட்டு விடுமுறை தரப்படுமா?' என்று கேட்கப்பட்ட மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர், 'வள்ளுவரை வணங்க விடுமுறை தேவையில்லை என்று சர்க்கார் கருதுகிறது' என்று பதிலிறுத்தாராம்.

'இதுபோன்ற விழாக்கள், உற்சவங்களுக்குப் போக அனுமதி வேண்டும் என்று பலர் கருதுவதால், அவ்விழாக்களையெல்லாம் பகலில் நடத்தி, இரவில் காரியாலயங்களை நடத்துவதை சர்க்கார் கவனிக்குமா?' என்று கேட்கப்பட்டபோது, அமைச்சர் 'இரவிலும் உற்சவங்கள் நடைபெறத்தான் செய்கின்றன' என்று பதிலிறுத்திருக்கிறார்.

விபசார ஒழிப்பு மசோதா

பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டது

புதுடில்லி, ஆக. 27—

குழந்தைகள் சம்பந்தமான மசோதா ஒன்றையும், பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்துவதை ஒழிப்பதற்கான மசோதா ஒன்றையும் பொறுக்குக் குழுக்களின் பரிசீலனைக்கு விடுவதென்று விவாதமின்றியே மக்கள் சபையில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

'சி' பிரிவு மாகாணங்களில் அனாதையாக விடப்படும் சிறு குழந்தைகளையும் குற்ற நடவடிக்கையில் இளம் பிள்ளைகளையும் பாதுகாத்து, பராமரித்து, கல்வி அளித்துப் புனர் வாழ்வு தருவதற்கான வசதிகளை அளிப்பதையே குழந்தைகள் மசோதா நோக்கமாகக்கொண்டது.

மாகாண அரசாங்கத்தின் அனுமதியின்றி தனிப்பட்டவர்களோ, நிலயங்களோ, 'பெண் பராமரிப்பு இல்லங்'களை நடத்துவதை, பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்துவதை ஒழிப்பதற்கான மசோதா தடைசெய்கிறது; இது, அம்மசோதாவிலுள்ள ஒரு தனி அம்சமாகும்.

சம்பத் சொற்பொழிவு

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லேயே நன்மை செய்ய முடிகிறது;' என்று கூறுகிறார்கள்.

"ஆனால், நன்மை நாள்பட்டுக் கிடைத்தாலும் தீமைகள் சூழாமல் காத்துக்கொள்ளும் வாய்ப்பு குடியரசு முறையில் மட்டுமே உண்டு. சர்வாதிகார அரசு முறையில், நன்மை சீக்கிரம் கிடைப்பதைப் போலவே தீமைகளையும் சீக்கிரத்தில் புகுத்திவிட முடியுமல்லவா? அந்த அபாயம் குடியரசு முறையில் கிடையாது.

"14-ம் லூயி காலத்தில் பிரான்சு நாட்டில் உப்புவரி விதிக்கப்படுகிறது; 'இந்த வரிதான் மிகக் கொடுமையானவரி' என்று மக்கள் கருதுகிறார்கள். 'இந்த வரியை விதிக்கக்கூடாது' எனக்கோருவதற்காக மக்கள் அரசனைப்பார்க்க வருகின்றனர். விருந்துண்டு கொண்டிருந்த இளம் பிராயத்திலிருந்த 14-ம் லூயி, 'மக்கள் ஏன் கூக்குரலிடுகிறார்கள்?' என்பதைத்தெரிந்து கொண்டதும், 'உப்புவரி அவர்களுக்குப் பிடிக்காவிட்டால் அந்த வரியை இரட்டிப்பாக்கு' என்று கூறினானாம்! இது, ஒரு சர்வாதிகாரியின்—ஒரு மன்னனின் மனப்போக்கு எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதற்கான எடுத்துக்காட்டாகும். குடியரசாயிருந்தால், இப்படிப்பட்ட ஆணவக்காரர்கள் அரசேற முடியாது; ஏறினாலும், அவர்கள் அரசு நீடிக்காது—நிலைக்காது!

"மேலைநாடுகளில், சிறந்த குடியரசுகளாக—மெய்யான ஜனநாயகத்தின் திருஉருக்களாக அமைந்துள்ள நாடுகளின் வரலாறுகள், அனுபவங்கள் நமக்கு நல்ல முதலீடுகளாகும்."

தானகவே டிக்கெட் தரும்

43 இயந்திரங்கள்

இரண்டு மட்டுமே தென்னாட்டில் உள்ளனவாம்

புதுடில்லி, ஆக. 27—

இரயில் நிலயங்களில் டிக்கெட்டுகள் கொடுக்கும் இடங்களில் ஏற்படுகின்ற பிரயாணிகள் கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு வசதி செய்து தரும் வகையில், தற்போது நாடு முழுமையிலும் 43 இரயில் நிலயங்களில் தானகவே டிக்கெட் கொடுக்கும் இயந்திரங்கள் இயங்கி வருகின்றன என்றும், அவற்றுள் இரண்டு இயந்திரங்கள் மட்டுமே தென் பிராந்திய இரயில்வேயில் இயங்கி வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சாலை போடுவதற்கு டில்லியின் உதவி

சென்னை சர்க்கார் கோரியுள்ளதாம்

சென்னை, ஆக. 27—

கோவளம்—மகாபலிபுரம் ஆகியவற்றுக்கிடையே போடப்பட்டு வரும் சாலை வேலைகள், 1957-ம் ஆண்டு இறுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சென்னை மேல்சபையில் மராமத்து இலாகா அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

கோவளத்திற்கு அருகிலுள்ள முத்துக்காடு என்ற கிராமத்திற்கு, திருவான்மியூரிலிருந்து ஒரு சாலை போடுவது குறித்து சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும் இந்தச் சாலை, பக்கிங்காம் கால்வாய்க்குக் கிழக்குப் பக்கமாக அமையும் என்றும் அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இந்தச் சாலை போடுவதற்காக, மத்திய ரோடு நிதியிலிருந்து மானியம் தருமாறு இந்திய சர்க்கார் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாம்!

உத்தேசம்தானும்

இறுதி முடிவு இல்லையாம்!

சென்னை, ஆக. 27—

சென்னை மாநிலத்தில் சேலத்தில் ஒரு அலுமினியத் தொழிற்சாலையும், நீலகிரியில் ஒரு காகிதத் தொழிற்சாலையும் நிறுவ மாநில சர்க்கார் உத்தேசித்திருக்கிறது என்றும், என்றாலும் இது குறித்து இறுதி முடிவுகள் எதுவும் செய்யப்படவில்லை என்றும், சென்னை மேல்சபையில் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்.

பத்திரிகைகளுக்குத் தேவையான காகித உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையைப் பெருந்தொகை செலவிட்டு சர்க்கார் நிறுவ இருப்பதாகவும், எழுதுவதற்கு மட்டும் உபயோகிக்கப்படும் காகித ஆலையை தனிப்பட்டவர்கள் நடத்த முன்வருவார்களானால் அவர்களுக்குச் சர்க்கார் உதவி செய்யும் என்றும் தெரிவித்த அமைச்சர், சேலத்தில் நிர்மாணிக்கப்பட இருக்கும் அலுமினியத் தொழிற்சாலையைச் சர்க்காரே ஏற்று நடத்த உத்தேசமிட்டிருப்பதாகவும் கூறினர்.

சிங்கப்பூர் திராவிட முன்னேற்றக் கழக இரண்டாம் ஆண்டுவிழாக் காட்சிகள்



1. சிங்கப்பூர் தி. மு. கழகச் செயலாளா சிங்காரவேலு 'தமிழ்முரசு' ஆசிரியர் கோ. சாரங்கபாணி அவர்களிடம் 'தமிழ் எங்கள் உயிர்' நிதி அளித்து மாலை அணிவிக்கிறார்.

2. 'மகளிர் கடமை' பற்றி தோழியர் கோவிந்தம்மாள்--சந்திரன் சொற்பொழிவாற்றுகிறார்.

3. 'தமிழ் எங்கள் உயிர்' நிதிக்கு உதவிய சீன வணிகர் சியா வாங் பெங் உரையாற்றுகிறார்.

நடுப்படம்: விழாவில் கலந்து கொண்ட மக்கள் பெருவெள்ளத்தின் தோற்றம்.

அகதிகள் தரும் தொல்லை

ஒதுக்கிய நிலத்தை மறுத்துவிட்டு நகர்ப்புறத்தில் சொத்து கேட்கின்றனராம்

புதுடில்லி, ஆக. 27—

ஓடிவரும் அகதிகள் என்னென்ன வகையான பிரச்சினைகளை உண்டாக்குகிறார்கள் என்பது தெரியவேண்டுமா? இதோ!

அகதிகளுக்கு இராஜஸ்தானில் நிலம் ஒதுக்கித் தரப்பட்டது; ஆனால், அந்த நிலத்தை விட்டுவிட்டு நகர்ப்புறங்களுக்கு வந்து, அவர்கள் ஏலத்தில் வாங்கும் சொத்துக்களுக்குப் பணம் தருமாறு சர்க்காரைக் கேட்கின்றனராம்.

இந்தத் தொல்லையைக் கண்ட பிறகு, இந்திய சர்க்கார் உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கின்றனராம்.

ஒரு முறை அகதி ஒருவருக்குத் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ நிலம் ஒதுக்கப்பட்டுவிட்டால், அவர் மீண்டும் ஏலத்தில் சொத்துக்கள் வாங்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்குரிய தொகையை ஈடாகக் கொடுப்பதற்கில்லை என்றும், நிலம் பெற்றுக்கொண்ட அகதி தன் தேவை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாகவே கருதவேண்டும் என்றும் உத்தரவு கூறுகிறது.

நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயற் குழுக் கூட்டம்

"16—9—56 காலை 10 மணியளவில், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், நெல்லை சந்திப்பு 'கிரீன் லாட்ஜ்' ஓட்டலில் நடைபெறும். மாவட்டக் கழக உறுப்பினர்களும், கிளைக் கழகச் செயலாளர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். விவரம் சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ளது; அதில் உள்ள விவரங்களை முன்கூட்டித் தவறாது அனுப்ப வேண்டுகிறேன்,"

என்று, நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. வி. கே. சாமி அவர்கள் அறிவிக்கிறார்.

தென்னாற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகள் கூட்டம்

"3—9—56 காலை 10 மணியளவில், தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், கள்ளக்குறிச்சி முசாபரி பங்களாவில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

"கீழ்க்காணும் பொருள்கள் பற்றிப் பரிசீலிக்கப்படும் :—

"1. மாநில மாநாடு நிதி வசூல் கணக்கு பார்த்தல்; 2. மாவட்டத்தில் இயக்க வளர்ச்சி; 3. பொதுத் தேர்தல் பற்றி ஆராய்தல்; 4. இதர விஷயங்கள். மாவட்டப் பிரதிநிதிகள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் அறிவிக்கிறார்.

மு. கருணாநிதி தம்மம்பட்டி வருகை

3—9—56 மாலை 6 மணிக்கு, தம்மம்பட்டியில், தி.மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர் மு. கருணாநிதி அவர்கள், தி. மு. கழகக் கிளையைத் துவக்கிவைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் கொடி ஏற்றுவிழாவாற்றுவார்; தோழர்கள் சிற்றுலி-சுப்பிரமணியம், ஆனைமுத்து ஆகியோர் பேசுவர்.

குறிப்பு : ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் தங்கள் கொடிகளுடன் வந்து அன்று மாலை 4 மணியளவில் நடைபெறவிருக்கும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மதுவிலக்கை தீவிரமாக அமுல் செய்ய!

மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி

புதுடில்லி, ஆக. 27—

மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்செய்ய மாநில சர்க்கார்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி செய்வது பற்றித் திட்டக்குழு பரிசிலனை செய்துவருவதாக மத்திய துணைத் திட்ட அமைச்சர் மிஸ்ரா கூறியிருக்கிறார்.

"நிதி உதவி அளித்து வருவதின்மூலம் மாநில சர்க்கார்கள் மதுவிலக்கைப் பூரணமாக ஒழித்துவிட முடியாது. சட்டம் இயற்றிவிடுவதின்மூலம் மக்களைக் குடிப் பழக்கத்திலிருந்து மாற்றிவிட முடியாது. அப்படியே கடுமையான சட்டம்கொண்டுவரப்பட்டால், நாடு முழுவதும் கள்ளச்சாராயத் தொழில் அதிகமாகப் பரவிவிடும். கொடியைக் காட்டுவதாலோ தடியைக் காட்டிவிடுதலாலோ இதனை ஒழித்துவிட முடியாது. சாமர்த்தியமான பிரச்சாரத்தின்மூலம் மட்டுமே இதனை ஒழிக்கவேண்டும்," என்று பிரதமர் நேரு அவர்கள் குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்.

'சாதிக்கேடுகளிருக்கும்போது சனநாயகம் தழைக்குமா?'

'பழைமை பேணிப் பாதுகாக்கப்படும்போது சமதர்மம் மலருமா?'

பம்பாய் கவர்னர் மெகதாப் கேள்வி

சூரத், ஆக. 26—

"சாதிகளையும் வகுப்புகளையும் வைத்துக்கொண்டு ஜனநாயகம் நடைபெறமுடியுமா?

"பழக்கங்கள் — வழக்கங்கள் இவற்றின் புனிதத் தத்துவத்தைக் காப்பதற்கென உள்ள சமூகச் சட்டங்கள் பலவும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டால் ஜனநாயக சோஷலிசம் மலருமா?"

என்று கேட்டிருக்கிறார், பம்பாய் கவர்னர் மெகதாப்!

"சாதிமுறைக் கேடு சமூகத் துறையில் ஒழிந்துகொண்டு வரும்போது அரசியலில் அது தலைகாட்டுகிறது. சாதிகள், ஓட்டு வாங்குவதற்குப் பயன் படுத்தப்படுகின்றன.

"பரம்பரைப் பழக்கம் இந்த சாதி—என்று கூறுகிற கொள்கை உடனடியாக ஒழிந்தாலன்றி, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு நீடிக்கத்தான் செய்யும்"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"தொன்மையான கலாச்சாரத்தைப் பெற்றிருந்தும் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இந்தியா விழ்ந்துபட்டுக் கிடக்கிறது; இதற்குக் காரணம், சமுதாய அமைப்பை மாற்றக்கூடிய புரட்சி ஏதும் நடைபெறவில்லை என்பது தான். நிலை நின்றுபோன கடந்த காலத்தில், நமது கலாச்சாரத்தில் முரண்பாடுகள் மலிந்துவிட்டன. மிகக் கேடான குற்றம் புரியும் கீழ்த்தரமான உள்ளமும், மிக உயர்ந்த தத்துவமும் ஏககாலத்தில் வாழ்ந்து வந்திருக்கின்றன"

என்றும் கவர்னர் மெகதாப் கூறியுள்ளார்.

மு. கருணாநிதி நிகழ்ச்சிகள்

ஆக. 30 : மதுராந்தகம் சிறப்புக் கூட்டம்

செப். 2 : திருச்செங்கோடு

3 : தம்மம்பட்டியும் சுற்று வட்டாரக் கிளைத் துவக்க விழாக்கள்

கழகக் கூட்டம்

★

செல்லம்பட்டு :

30—8—56 மாலை 5 மணிக்கு

தி. மு. கழகத் துவக்க விழா

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு

டி. பி. கேசவன்

ந. நாச்சியப்பன்

★

சென்னிமலை :

குமரன் திடல்

31-8-56 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

★

வடசிறுவளூர்:

31-8-56 மாலை 5-30 மணிக்கு

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

டி. பி. கேசவன்

ந. நாச்சியப்பன்

சொத்து வரி மூலம் வசூலான தொகை

சென்னை செலுத்தியதுஎவ்வளவு?

புதுடில்லி, ஆக. 28—

1955-ம் ஆண்டில் சொத்து வரி மூலம் மொத்தம் ரூ. 1,44,69,884 கிடைத்ததென்றும், அவ்வருடத்தில் சொத்து வரி சம்பந்தமாக மொத்தம் 4,031 வழக்குகள் பதிவாயிற்று என்றும், மொத்தம் 2,947 வழக்குகள் பைசல் செய்யப்பட்டன என்றும், மாநிலங்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலிருந்து தெரிகிறது.

சொத்துவரிமூலம் வசூலான தொகைகள் மாநிலவாரியாக ஆந்திரா ரூ. 17,510; சென்னை ரூ. 9,49,000; ஐதராபாத் ரூ 3,49,551; மைசூர் ரூ. 70,057; திரு-கொச்சி ரூ. 3,09,606; குடகு ரூ. 91,679 ஆகும்.

பத்திரிகைகளின் பக்கங்கள் விலை நிர்ணய மசோதா

மக்கள் சபையில் விவாதம்

புதுடில்லி, ஆக. 28—

பத்திரிகைகளின் பக்கம், அவற்றின் விலை ஆகியவற்றை நிர்ணயம் செய்யும் மசோதா ஒன்றைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு பிரரேபித்த அமைச்சர் பி. வி. கேஸ்கர், அந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றுவதானது சுயேச்சையாக இயங்கும் சிறு பத்திரிகைகளுக்கு உயிர் வாழ நியாயமான வாய்ப்புத் தரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பத்திரிகைகளின் பக்கங்களைக் குறைத்துவிட்டால் அவற்றின் சுதந்திரம் குறைந்துவிடுமென்றோ, சுயேச்சையான போட்டா போட்டியை அது தடுத்துவிடுமென்றோ தாம் நினைக்கவில்லை என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் வழங்கும் நஷ்ட ஈடு

நெக்கோவால் சம்பவம் சம்பந்தமாகப் பாகிஸ்தான் சர்க்கார் விரைவில் ஒரு இலட்சம் ரூபாய் அடையாளப் பூர்வமாக நஷ்டஈடு தர இருப்பதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளதென பிரதமர் நேரு அவர்கள் மாநிலங்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்மணி

இந்தூர், ஆக. 28—

மத்திய பாரத் மாநிலத்தில் 30 வயதுடைய பெண் ஒருவர் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் என்ற தகவலை, ம. பி. மாநில சட்டசபையில் அமைச்சர் ஒருவர் தந்துவிட்டு, அம்மாதுவின் பெயர் கலாவதி என்றும், அவர் 'புட்லி' என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படுகிறாரென்றும், கடந்த 5 ஆண்டுகளாக அம்பா, மொரினா வட்டாரங்களில் கொள்ளைத் தொழில் செய்து வருவதாகவும் அம்மாதுவைப் பற்றிய மேலும் சில விவரமான குறிப்புகளையும் அவ்வமைச்சர் தந்திருக்கிறார்.

சுல்தான் என்ற பெயருடைய ஒரு கொள்ளைக்காரன் இம்மாதுவைக் கடத்திக்கொண்டு வந்து இத்தொழிலில் ஈடுபடுத்திவிட்டதாகவும், இக்கொள்ளைக் கூட்டத்தினரிடம் 'ஸ்டென்' துப்பாக்கிகள், துப்பாக்கிகள், நாட்டு வெடிகள் போன்றவை இருக்கின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

தாராசிங்கிற்குப் பரிசு

புதுடில்லி, ஆக. 26—

அகாலி தளத்தலைவர் மாஸ்டர் தாராசிங் அவர்களின் 71-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அவருக்கு இவ்வருட 'மாடல்' கார் ஒன்றும், 71 தோலா நிறையுள்ள தங்கச் சங்கிலி ஒன்றும் பரிசாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்!

மத்திய அரசாங்க ஊழியர் பொதுக்கூட்டம்

30-8-56 மாலை 6 மணியளவில், மத்திய அரசாங்க ஊழியர் சங்கங்களின் இணைப்புக் குழுவின் ஆதரவில் சென்னை கோகலே மண்டபத்தில் கே. ராமமூர்த்தி தலைமையில், ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் வி. வி. கிரி, எஸ். குருசாமி, நரசிங்கராவ், டி. வி. ஆனந்தம், டி. எஸ். இராமாநுசம் ஆகியோர் பேசுவர்.

மதுரைத் திருவள்ளுவர் கழக 15-வது ஆண்டுவிழா

ஆக. 31, செப். 1, 2 ஆகிய மூன்று நாட்களிலும், மதுரைத் திருவள்ளுவர் கழக 15-வது ஆண்டு நிறைவு விழா மதுரை, வடக்காடி வீதியிலுள்ள கழக மன்றத்தில் நடைபெறும்.

தத்து, ஜீவனாம்சம் குறித்த சட்டத்திற்குத் திருத்தம்

புதுடில்லி, ஆக. 28—

இந்துக்களிடையே தத்து எடுத்தல், ஜீவனாம்சம் ஆகியவை குறித்த சட்டத்தைத் திருத்துவதற்கும் தொகுப்பதற்கும் வகை செய்யும் மசோதா ஒன்றை, டில்லி மாநிலங்கள் சபை விவாதிக்காமலேயே சபையின் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட்டுள்ளதாம்.

மரண தண்டனை ஒழிப்பு

புதுடில்லி, ஆக. 24—

மரண தண்டனை ஒழிப்பை நாட்டிலுள்ள பெரும்பாலான மாநிலங்கள் ஆதரிக்கவில்லை என்ற தகவலை மத்திய சட்டஅமைச்சர் சி. விசுவதாஸ் மக்கள் சபையில் தந்திருக்கிறார்.

நெய்வேலித் திட்டங்கள்

நிறைவேற்றுவதென முடிவாகிவிட்டதாம்

புதுடில்லி, ஆக. 27—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தை நிறைவேற்றிவிடுவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டனராம்.

சுரங்க இயந்திரங்கள் போன்ற சாதனங்களை ரூ $2\frac{1}{2}$ கோடி செலவில் வெளிநாடுகளிலிருந்து தருவிப்பதற்கு விரைவிலேயே ஆர்டர்கள் கொடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. திட்டத்தை விரைவிலேயே செய்து முடிக்க வசதியாக இருக்கும்படி, அந்தச் சாதனங்கள் அனைத்தும் சரியான நேரத்தில் நெய்வேலியில் கிடைக்கும் வகையில் இப்போதே வெளிநாடுகளுக்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டு வருகின்றனவாம்.

மண் வெளியேற்றல், நிலக்கரி தோண்டுதல் போன்ற முதல் கட்ட வேலைகளைச் செய்வதற்கான விசேட இயந்திரத் தளவாடங்களுக்காக ஏற்கனவே ரூ. $2\frac{1}{2}$ கோடிக்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவாம்.

நெய்வேலி திட்டத்தின் 3 கட்ட வேலைகளையும் நிறைவேற்றி வைப்பதற்கு விரிவான வேலைத் திட்டத்தை மத்திய உற்பத்தி இலாகா தயாரித்து வருகிறதாம்.

இரண்டு இலட்சம் 'கிலோவாட்'டுக்கு மேல் மின்சக்தி உற்பத்தி, 70,000 டன் ஐட்ரஜன் உர உற்பத்தி, தொழில்கள், வீட்டு உபயோகங்கள் ஆகியவற்றுக்கு எரிபொருளாகப் பயன்படுவதற்கான 3,80,000 டன் நிலக்கரிப் பாளங்கள் உற்பத்தி ஆகியவைகளே நெய்வேலித் திட்டத்தின் முக்கிய மூன்று கட்ட வேலைகளாகும்.

இத்திட்டம் முழுமைக்கும் ரூ. 69 கோடி செலவாகும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிலக்கரி சுத்திகரிப்பு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1958-ம் ஆண்டுத் துவக்கத்திற்குள் வேலை துவங்கிவிடுமாம்.

இதனை ஜப்பான் நிறுவனம் ஒன்று அமைத்துத்தருமாம்.

மேலும் எட்டு இந்திய நிபுணர்களை ஜப்பானுக்கு அனுப்பி அவர்கள் இந்தத் தொழிற்சாலையை நடத்துவது எப்படி என்று பயிற்சியும் பெறுவர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்னை—வண்ணை இளங்கோ கலைமன்றம்

30—8—56 இரவு 7 மணிக்கு, மன்றப் பணிமனையில், திரு. ச. செங்கேணி தலைமையில், மன்றச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். நூலகத்திற்குப் பெயர் தேர்ந்தெடுப்பதும் மன்ற வரவு-செலவு கணக்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.